1156

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# மல்லிக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை--7 குருதலம், மாம்பாக்கம்; செய, பங்குனி, 1—4—55 தளிர்-26

... OF THE ...
20 MAY 1955
MADRAS

## கலைஞனும் ஞானியும்

வாழ்வில் கலைஞனைக் கண்டோம். அவ்வாழ்வுக்கு அடிப்படையாயுள்ள மற்றொருவன் தத்துவ ஞானி. வாழ்க்கையில் அதிருப்தியைக் கண்ட அவன் தான் 'திருப்தி' என எண்ணுவதை உருவகப்படுத்தி நிலைநாட்ட முற்படுவதற்குப் பதிலாக அவ்வதிருப்தியின் ஊடேயே திருப்தியைக் காண முற்படுகின்றான். பிறக்கும்போதே தன்னுடன் பிணைக்கப்பட்ட விதி என்னும் பாதையில், கட்டுங்கடங்காமல் தன்போக்கில் சுழலும் உருட்டிவிட்ட சக்கரமே வாழ்க்கை என்பதை அவன் நன்குணர்ந்தவன். ஆனால் அவன் வாழ்க்கையின் சாரமற்ற அகப்போர்களைக் கண்கூடாகக் காணும்போது 'அவ்வளவுதானா வாழ்க்கையின் இழிந்தநிலை' என்று வருந்துவதற்குப் பதிலாக, நொந்த அவனது உள்ளம் 'இதுவேதான் வாழ்க்கை' என்று தெளிவடைந்து அமைதி நிரம்பிய ஒரு வெற்றுப் புன்னகையினை அவன் அடிமனத்தின்கண் எழுப்புகின்றது. உலகில் துன்பச் சுழலில் துரும்பென உழலும் எல்லோரும் தன்னைப்போல் அமைதியினை அடையவேண்டும் என்று அவன் மனம் அலாவுகின்றது. அவ்வவாவினால்தான் கண்ட உண்மையினை, அவாவினை, உலக மக்கள் அறிய வேண்டுமென அறைகூவுகின்றான். அக் கூவலில் ஒன்றிய உண்மையினை ஏறத்தாழ அறிந்தானொருவன் அவனோடு வந்து சேருகின்றான். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்பது பழமொழி; இவ்வாறான உள்ளத்தின் விரிந்த நட்பு முறையே தத்துவ ஞானியையும். அவன் கண்ட உண்மைகளைச் சுவைத்த மாணவனையும் ஒன்றுபடுத்தும் தொடர், பாலமாக அமைகிறது.

மேற்கூறிய கலைஞன் தத்துவ ஞானி இருவரும் தாம் காண விரும்பிய உண்மையினை அடைந்தே தீருகின்றனர் வாழ்க்கையின் எல்லைக் கோட்டினை அறிந்த இருவரும் மீட்டத் தொடங்கிமீட்டி முடிக்குங் கீதம் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதுதான். என்றாலும் இவ்வுண்மையினைப் பெறும் முறையிலும், பெற்றதை அறிவிக்கும் முறையிலும் மிக்க வேறுபாடு உண்டு. கலைஞன் வாழ்க்கையின் வளமையையும் தத்துவ ஞானி வாழ்க்கையின் செம்மையையும் உணர்த்துகின்றவர்கள். கலைஞன் விருப்பு வெறுப்பினை வளர்ப்பவன். தத்துவ ஞானி அவைகளைத் தேய்ப்பவன். உலகின்கண்ணுள்ள எல்லாப் பொருள்களிடமும் ஈடுபட்டு அவ்வவற்றின் தன்மைகளை ஒன்றி உணர்ந்து வேறுபாடுகளை மிக நுணுக்கமாகத் தீட்டுவோன் கலைஞன். முட்புதருக்கும், பஞ்சணைக்கும் தொடும் உணர்ச்சியால் வேறுபாடில்லை; 'எல்லாம் 'பிருதிவியின் அமிசம்' என்று அறிவுறுத்துவோன் தத்துவ ஞானி உலகியல்பின் ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு அறியும்போது தன்னையே மறப்பவன் கலைஞன். அதேநிலையில் தன்னைத் தான் அறிபவன் தத்துவஞானி, தன்னை மறக்கும் கலைஞன் உலகை ஊட்டி வளர்க்குந் தாய். தன்னைத் தான் அறியுந் தத்துவ ஞானி வாழ்வுக்கு உறுதி தந்து வழி காட்டுந் தந்தை; கலைஞன் மங்கள உருவினன்; தத்துவஞானி சாந்தச் சுடர். முன்னவன் உவகை வெள்ளம். பின்னவன் அமைதி ஊற்று. இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தால் ஆ! அங்கே

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | செய, பங்குனி, | தளிர் |
|---|---|---|
| 7 | 1-4-55 வெள்ளி. | 26 |


# இரண்டே கருத்துக்கள்

ஒரு நாள்:

முப்பது ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள்! சென்னை மாநிலத்தில் செங்கற்பட்டுக் கோட்டத்தில் குளம்பேட்டுக் கருகில் வன்னிய நல்லூரில் தோன்றியவரான **C. S.** சுவாமிநாத முதலியார் **B. A** என்னும் பெருமகனைச் சூளைம் பேட்டில் சந்திக்க நேர்ந்தது. அங்கே உள்ள பாடசாலையின் மாணவர் கழகத்தில் அவர் தலைமை ஏற்று இனிய அறிவுரைகள் வழங்கினர். அவர் சென்னைச் சட்ட சபையில் அப்போது செயலாளராயிருந்தார்.

கூட்டம் மாணவர் கழகத்தைச் சேர்ந்ததாய் இருந்தாலும் ஊர் மக்களும் சுற்றுப்புற மக்களும் வழக்கத்திற்குமேல் திரண்டிருந்தனர். தலைவரவர்களின் நல்லுரை கேட்பதில் அவர்களுக்கும் ஆர்வம் மிகுதியாயிருந்தது. முன்னுரை ஏதோ பொதுக் கருத்துகள் அமைந்து கால்மணி நேரத்தில் முடிந்து விட்டது. நான் திருவாசகத்தைப் பற்றிப் பேசினேன்; பள்ளி மாணவர்கள் புலால் மறுத்தலைப் பற்றிப் பேசியபின், தலைவர், அரைமணி நேரம் பின்னுரையாகப் பேசினர். அதில், இரண்டே கருத்துக்களை அவர் வலியுறுத்தினர்.

"திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த 'திருவாசகம்' என்பது அருள் வண்ணமானது; உருக்கத்தில் சிறந்தது; பிறவிக்குத் தேன் போல் சுவை மிக்க மருந்தாயிருப்பது; திரு. போப் முதலிய வெளி நாட்டு அயல் மதத்தவராலும் மதிக்கப் பெற்றது.

நோக்கமும் போக்கும்:

அருளை வடிவமான திருவாசகத்தை நன்றாக நுகர்வதற்கு ஒரு வகையான உள்ளப்பக்குவம் வேண்டும்; புலால் மறுத்தலால் அந்த நிலை உண்டாகும் என்று எனக்குத் தோன்றுகிறது சிறு பருவம் முதற்கொண்டே அப்படிப் புலால் மறுத்த பழக்கம் இருப்பது நல்லது

திருவாசகம் அருள் என்னும் ஞானத்தை வழங்கும்; புலால் மறுத்தலை ஒரு நோன்புபோலக் கொண்டு உறுதியாகப் பழகிவருவது, அந்த ஞானம் விளையக் கூடிய பக்குவ நிலையை நமக்கு உண்டாக்கிவிடும்.

உலக மக்களின் உள்ளம் நல்ல பக்குவ நிலைக்கு வளர வளர, வாழ்க்கையில் துயரங்கள் குறைந்து வரும்; ஆட்சியிலும் சிக்கல்கள் தீர்ந்துவரும்.

இன்று திருவாசகத்தைப் பற்றியும் புலால் மறுத்தலைப் பற்றியும் பேச்சு நடந்தது எல்லார்க்கும் நல்லது; ஒன்று வாழ்க்கையின் நோக்கத்தைக் காட்டுகிறது; மற்றொன்று அதற்குரிய போக்கை வலியுறுத்துகிறது; உயர்ந்த நோக்கம் சிறுவர்களுக்கு இப்போது புலப்படாவிட்டாலும், அதற்குரிய போக்கைக் கடைப்பிடித்து அவர்கள் பழகிவர முடியும்.

தீர்மானம்:

இதிலிருந்து நானும் ஒரு தீர்மானத்துக்கு வருகிறேன்; கூடிய வரையில் புலால் மறுத்தலை நாட்டில் பரவ வைப்பதற்கு என்னால் இயன்றது செய்ய இன்று உறுதி ஏற்கிறேன்;

இன்று நடந்த நிகழ்ச்சி என் உள்ளத்தை மிகவும் கவர்ந்திருக்கிறது; பாடசாலைக்கு என் பாராட்டு"

சரியாய் அரைமணி நேரத்தில் பின்னுரை முடிந்தது. மக்கள் மிக்க ஆரவாரக் கிளர்ச்சியுடன் கலைந்தனர். தலைவர் நாட்டுத் தொண்டரைப் போன்ற வீரத் திருவுடன் இரவு 8-மணிக்கு இரட்டைமாட்டு வண்டியில், அங்கிருந்து இரண்டு கல் உள்ள தம் வன்னிய நல்லூர்க்குச் சென்றார்.

சொல்லியபடி:

அன்று நடந்த நிகழ்ச்சி இன்றும் என் கண்முன் அப்படியே உள்ளது; 'திருவாசகப் பயன் அருள்; அதனைப் பெறும் பக்குவம் புலால் மறுத்தலால் உண்டாகும்' என்று அவர் கூறிய இரண்டே கருத்துகள் இன்னும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன; புலால் மறுத்தால் அல்லாமல் அருள் முதலிய உயர்ந்த தெளிவுகளைத் தகுதியாக அடைய முடியாது என்று தெரிவதனால் என் நாட்டு மக்களை நல்வழிப்படுத்துவதற்காகப் புலால் மறுப்புத் தொண்டில் இனி ஈடுபடும் [illegible]று

அவர் துணிந்த துணிவு நாளும் என் உள்ளத்தில் வீரம் பெருக்கி நிற்கின்றது.

அதன்பின் ஏழு ஆண்டுகள் கழித்துச் சென்னையில் அப் பெருமானைக் காண நேர்ந்தது. என்ன வியப்பு! 'சென்னை மரக்கறி யுணவுச் சங்கம்' (The Madras Vegitarian Socity) என்று ஓர் அமைப்பை நிறுவி அதனை இனிது நடத்துவோராய் அவர் விளங்கினார்; சென்னை மாநிலத்துச் சட்டசபையின் செயலாளராய் இருந்தலோடு 'சென்னை மரக்கறி யுணவுச் சங்கத்'தின் செயலாளராகவும் அவர் திகழக் கண்டேன். 'சொல்லிய வண்ணம் செய்'லில் நின்ற அவரது பெருமிதம் எனக்குத் தெய்வக் காட்சியாய் இருந்தது. சென்னைப் பேட்டைகளில் இச் சங்கத்தின் சார்பில் நாள்தோறும் புலால் மறுப்புச் சொற்பொழிவுகள் நடந்துவந்தன.

ஆண்டு விழா:

ஒரு நாள் சென்னை மரக்கறியுணவுச் சங்கத்தின் ஆண்டு விழா! கோலாகலமான நிகழ்ச்சிகள்; கோகலே மண்டபத்தில் கூட்டம்; 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்று நூல் எழுதிப் புலால் மறுப்புத் தொண்டில் தீவிரமாக ஈடுபட்டு விளங்கிய ஆசிரியர் மறைமலையடிகளாரின் அரிய தலைமை; ஆங்கிலத்திலும் தீந்தமிழிலும் இனிய சொன்மாரிகள்; இருமொழிகளிலும் உயர்ந்த ஆராய்ச்சி வெளியீடுகள்; 'மவுண்ட் ரோ'டில் இரவு ஒரு பெரிய உணவு விடுதியில் மரக்கறி உணவுகளால், இப் பழக்கம் உடையார் அல்லாதார் ஆகிய அனைவர்க்கும் விருந்து!

அப்போது நான் சென்னையில் இருந்ததனால் விழாவில் எளிதாகக் கலந்து கொள்ள முடிந்தது; 'காங்கிர'சின் சட்டமறுப்புத் தொண்டுகளில் ஆயிரம் ஆயிரம் தலைவர்களும் தொண்டர்களும் தன்னல இழப்புடன் துணிந்து குதித்துப் பணிபுரிவதுபோல, இப் புலால் மறுப்புப் பணியிலும் இப் பெரியாரைப் பின்பற்றித் தக்கோரும் இளைஞர்களும் பல்லாயிரம்பேர் துணிந்திறங்கிப் பணிசெய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்; மெல்லிய ஆற்றல் உணர்வுகள் நாட்டில் எவ்வளவு நன்றாய் நிலவும்! என்று தோன்றியது.

அவ்வளவுதான்:

பிறரை நினைப்பதற்குமுன் நாமல்லவா இப் பணியில் துணிந்திறங்கவேண்டும் என்று மின்னல்போல் ஓர் உணர்ச்சி என்னுள் எழுந்து மிளிர்ந்தது. விரைவில், 'சென்னைப் புலால் மறுத்தல் சங்கத்'தின் விரிவுரையாளராய் மாறினேன். ஓராண்டுக் காலம் சென்னைப் பேட்டைகளிலும் ஒதுக்கிடங்களிலுமெல்லாம் புலால் மறுப்புப் பணியிற்றி அமைந்தேன்; 'ஏன் புலால் மறுத்தல் வேண்டும்' என்னும் ஆராய்ச்சி வெளியீடு ஒன்றும் அப்போது எழுதி வெளியிட நேர்ந்தது.

புலால் மறுப்புப் பணிக்குச் சிறந்த ஆராய்ச்சிக் கருக்களுடன் அடிப்படைத் திட்டங்கள் அமைத்துக் கொடுத்த பெருமான் உலகுக்கே ஆசிரியர் திருவள்ளுவராவர். அவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இயற்றியுதவிய 'திருக்குறள்' என்னும் வாழ்க்கை வேதத்தில் புலால் மறுத்தல் என்றே ஓர் அதிகாரப் பகுதி வகுத்து அருமையான கருத்துக்களை அதன்வாயிலாக வெளியிட்டிருக்கின்றாராதலால், ஒவ்வொரு பேட்டைச் சொற்பொழிவுக்கும் அவ்வதிகாரத்தின் ஒவ்வொரு குறளை அடிப்படையாக எடுத்துக் கொள்வது அப்போது வழக்கம்.

இன்று, சென்னை மரக்கறியுணவுச் சங்கத்தின் செயலாளராயிருப்போர் அன்று சூளைம்பேட்டில், 'புலால் மறுப்புப் பழக்கம் இல்லாமல், திருவாசக அருளை எப்படி அடைய முடியும்?' என்று கருதி மொழிந்த கருத்து. திருக்குறள் புலால் மறுத்தல் அதிகாரத்தில்

“ தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்”

என்னும் முதற் குறளிலேயே திருவள்ளுவரும் முன்பே கருதியிருப்பது மிக்க வியப்பை உண்டாக்கியது; பொருத்தம் அறிந்து உள்ளம் கிளர்ச்சி கொண்டது!

நாளுக்கு நாள்;

'புலால் மறுப்புப் பணிக்கு வேறு பணித்திட்டங்கள் (நிர்

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

மாணத் திட்டங்கள்) தேடிக் கொண்டிருக்க வேண்டாமே; திருவள்ளுவர் இயற்றியுதவிய புலால் மறுத்தல் அதிகாரத்தின் பத்துக் குறள்கள் கூறும் பத்து வகைப் பணித்திட்டமே போதுமே; அவற்றைக் கொண்டு, கருத்துடையார் மெய்யன்புடன் பணி செய்தால் ஒரு புலால் மறுத்தல் உலகத்தையே விரித்துப் புதுக்கி அமைக்கலாமே! யார் யார் என்னென்ன கருத்துக்கள் இப் பணிக்குக் கூறினும் அவை முழுதும் இப்பத்துத் திட்டங்களிலே அடங்கி அமைவதைக் காணலாமே' என்றெல்லாம் அக்காலங்களில் தோன்றியது; இன்றுவரையில் ஆராய ஆராய அந்த எண்ணம் மேன்மேல் உறுதிபெற்றே வருகின்றது.

இருபதாண்டுகள் கழிந்த பின் இன்று 'சென்னை மரக்கறியுணவுச் சங்கத்'தின் செயலாளராகிய அப்பெரியார் இந் நிலவுலக வாழ்வில் இல்லை; அச் சங்கத்தின் அமைப்பும் இன்றிருப்பதாகத் தெரியவில்லை; ஆனால், திருவள்ளுவர் முதலிய சான்றோர் கருத்துகள், புலால் மறுப்புப் பணியில் நாளுக்கு நாள் வேறு வேறு அன்பர்கள் சிந்தையில் ஊறி வேறு வேறு அமைப்புகள் வாயிலாகத் தொடர்ந்து, செய்கைகள் மூண்டுகொண்டே வருகின்றன!

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

## உயர்நிலை யுறுதல்

உயர்வாக வாழ வேண்டும். நன்றாக வாழ வேண்டும். இன்பமாக வாழ வேண்டும். மூன்றும் ஒன்றுதான். உயர்வாக வாழாதவன் நன்றாக வாழான். நன்றாக வாழாதவன் இன்பமாக வாழான். அறிஞர்க்கு இம் முறைமை எப்போதும் தெரிந்திருக்கிறது. அறியார்க்கு அவர் அறியாமையால் அம் முறைமை தெரிவதில்லை. ஆனால் அவர்களும் இன்பமாக வாழ விரும்புகின்றனர். உயர்வையும் நன்றையும் அவர்கள் கருதுவதில்லை. உயர்வும் நன்றும் இன்பத்திற்குக் காரணம் என்பது அவர்கட்குத் தெரிவதில்லை. எனவே இன்பமாக, நன்றாக, உயர்வாக வாழ விரும்புபவன் முதலில் அறிஞனாக வேண்டும்.

அறிஞன் ஆவது மனிதன் முதற் கடமை. அறிஞன் ஆவது எவ்வாறு? அறிவு ஆராய்ச்சியினால் உண்டாகும். எதனை ஆராய்வது? அறிஞர் கூறுவதை ஆராய்வதால் அறிவு உண்டாகும். அறிஞர் கூறுவதை நம்புவது நல்லதுதான். ஆனால் அவர்கள் கூறுவதை ஆராய்ந்து அறிந்து கொள்வது அதைவிட நல்லது. ஆனால், ஆராயும் ஆற்றல் எல்லார்க்கும் இல்லை. அறிஞர்-மேலோர்-சான்றோர் கூறுவதை ஆராயும் ஆற்றல் இல்லாதவர் நம்புக. ஆராயும் ஆற்றல் உடையவர் ஆராய்ந்து அறிந்து கொள்க.

இங்ஙனம் அறிஞன் ஆவது மனிதன் முதற் கடமை என்பதை வற்புறுத்தவே, அறிஞராகிய நம் முன்னோர், மக்களாய்ப் பிறந்தோர் ஐந்து கடமைகளை அவசியம் ஆற்றல் வேண்டும் என்று கூறி, அவற்றுள் வேதம் முதலிய அறிவு நூல்களைக் கற்றலை முதலில் ஆற்றவேண்டிய முதற் கடமையாகக் கூறினர். அவ்வைந்து கடன்கள் பிரம்ம யக்ஞம், தேவ யக்ஞம், பிதிர் யக்ஞம், மானுட யக்ஞம், பூத யக்ஞம் என்று பஞ்சமஹா யக்ஞம் என்னும் பெயரால் கூறப்படும். இவ்வைந்து யக்ஞங்களைச் செய்யாதவர் பாபிகளாகின்றனர் என்று நூல்கள் கூறும். ஆராய்வார்க்கு இக் கருத்து வெள்ளிடைமலை எனத் தெள்ளிதின் விளங்கும். எனினும் ஒன்றை ஆராய்வாம். பிரம்ம யக்ஞம்- அறிவு நூலைக் கற்றல்- செய்யாதவன் அறியாதவன் ஆதலின் தன் உடலைப் பேணுவதையும் புலனின்பங்களை அநுபவிப்பதையுமே விரும்புகின்றான் ஆனால் எதனை, எப்படி, எவ்வளவு, எப்போது உண்டால், உடல் நோயுறாது சுகமாயிருக்கும் என்பதுகூட அவனுக்குத் தெரியாது. சுவை கருதியே உண்டு நோயடைகிறான். புலனின்பங்களிலும் எப்படி, எவ்வளவு, எப்போது, அநுபவிப்பது என அறியாது அநுபவித்து நோய்க்காளாகின்றான். அறியாமையால், பிறர் தம்முடலைப் பேணுவதற்கும், பிறர் புலனின்பங்களை அநுபவித்தற்கும் தான் உதவியாய் இருக்க வேண்டும் என்னும் கடமையையும் இவன் உணர்வதில்லை இவன் பாபி யாவதில் என்ன ஐயம்?

அறிஞனாக விரும்புவன் முன்னோர் கூறிய அறிவு நூல்களை ஆராய்வதோடு, தன் காலத்து வாழும் அறிஞர் கூறுவதையும் ஆராய்தல் வேண்டும். இம்முறையில், இக் காலத்து அறிஞர் போற்றும் அறிஞராகிய மகாத்மா காந்தியடிகள் மக்கள் உயர் நிலை யுறுவதற்கு என்ன வழிகளைக் கூறினார் என்

பதை நோக்குவோம். அவர் அஹிம்சை, சத்தியம் என்னும் இரண்டினையும் பறை சாற்றியிருக்கின்றார் என்பது யாவரும் அறிந்ததே. அவர் எழுதியவற்றைத் தொடர்ச்சியாகப் படிப்பவர், அவர் இவற்றோடு அஸ்தேயம், பிரம்மசரியம், அபரிக்கிரகம் என்னும் மூன்றையும் கூட எல்லாரும் அனுசரிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் என்பது உணர்வர்.

இனி. "அஹிம்சா, சத்தியம், அஸ்தேயம், பிரம்ம சரியம், அபரிக்கிரகம் என்னும் ஐந்தும் இயமம்" என்ற பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக சாஸ்திர வசனம், யோகத்தின் எட்டு அங்கங்களிலும் முதல் அங்கமாக இவ்வைந்தையும் கூறுகிறது. அறியாதவர்கள் தமக்கு யோகம் வேண்டாம் என்று நினைக்கின்றனர். யோகம் ஆத்மாவை அறிவதற்குச் சாதனமாயினும், அதன் முதலிற் கூறிய சில அங்கங்கள் எல்லாரும் அனுசரிப்பதற்குரியன. "சாதி, தேச, கால, சமய வித்தியாசம் பாராட்டாமல் எல்லாச் சாதியினரும், எத்தேசத்திலும், எக்காலத்திலும், எச் சமயத்திலும் அனுசரிப்பதற்குரியது இயமம்" என்று பதஞ்சலி முனிவரே கூறுகின்றார். இந்த ஐந்து இயமங்களை அனுசரிப்பவர் சாமர்த்தியம் உடையவர் ஆகின்றனர். சாமர்த்தியமாவது உடலின் தகுதியும் மனத்தின் தகுதியுமேயாம். உடல் நோயும் சோம்பலுமின்றித் தொழில் செய்யக் கூடியதாய் இருத்தல் உடலின் தகுதியாம்; மனம் ஆசை கோபங்களால் மழுங்கிப் போகாமல், அச்சமற்று அமைதியாய், எவற்றையும் அறியக் கூடியதாய் இருத்தல் மனத்தின் தகுதியாம். இவ்விரண்டு தகுதியும் இலௌகிக காரியங்களுக்குக் கூட—ஒரு ஏழை மனிதன் தன் குடும்பத்தைச் செவ்வனே நடத்துவதற்குக் கூட - துணையாகுமன்றோ!

அஹிம்சையாவது யாதோருயிர்க்கும் மனத்தினாலும், வாக்கினாலும், காயத்தினாலும் தீங்கு செய்யாமையாம். தொடக்கத்திலேயே, பாம்பைக் கொல்லலாமா? தேளை அடிக்கக்கூடாதா? என்று கேள்வி கேட்காமல் கூடியவரை பயில்க. இதனைப் பயில்பவன் பகையற்றவன் ஆகின்றான்.

சத்தியமாவது உண்மை கூறுதல்; தொடக்கத்திலேயே, பிறர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுப் பொய் கூறலாமல்லவா? என்று சந்தேகிக்காமல் மெய் பேசிப் பழகுக. இதனைப் பயில்பவன் வாக்குப் பலிக்கும். அதாவது அவன் சொல்வதை மற்றவர் கேட்டு நடப்பர்; அவன் மகிழ்ந்து கூறினும் அழன்று கூறினும் அச் சொல் பயன் தரும்.

அஸ்தேயமாவது பிறர் பொருளைத் திருடாமை. ஏழைக்கு உதவாது பணத்தைச் சேர்த்தல் திருடுதல்தான் என்று காந்தியடிகள் கூறுகின்றார். நல் வழியில் பொருளீட்டிப் பிறர்க்கு உபகாரியாய் வாழ்வதே அஸ்தேயமாம். இதனைப் பயில்பவனுக்குச் செல்வம் சேரும்.

பிரம்மசரியமாவது இந்திரியங்களை யடக்குவதன் மூலம் விந்து சம்ரட்சணம் செய்தல். இதனைப் பயில்பவன் மனத் தெளிவு, புத்தி நுட்பம், அஞ்சாமை, உடல் வலிமை, பிணியின்மை, நீண்ட வாழ் நாள் முதலியவற்றை அடைகின்றான். பிரம்மசரியம்தான் மனிதன் அடைதற்குரிய எல்லா நன்மைகளுக்கும் காரணமாகின்றது. ஆதலால், இது மனித வாழ்க்கையின் கடைகால் எனத் தகும்.

அபரிக்கிரகமாவது அனாவசியமான பொருள்களைப் பெறாமை. அனாவசியமான பொருளை விலை கொடுத்தும் வாங்கக் கூடாது; பிறர் இனாமாகக் கொடுத்தாலும் பெறக்கூடாது. ஒரு பொருளை வாங்குமுன் அது இல்லாமலே தன் வாழ்வு நடக்குமா என்று எண்ணி, அது இல்லாமல் நடவாது என்று தோன்றினால் மட்டும் வாங்க வேண்டும். இதனைப் பயில்பவன் பிறப்பின் காரணம் உணர்ந்தவனாய் மக்களில் உயர்ந்தோனாகின்றான்.

இவ் ஐந்தையும் நன்குணர்ந்து அனுசரித்து உயர் நிலை உறுவோமாக.

—உயரும் வழி.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலே அது வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. கொடுமை கண்டவிடத்துக் கொதித்தெழும் உள்ளமும், பிறர் கண்ணிலே நீர் கசியக் கண்டு, அதைத் துடைக்க நீளும் கரமும் எங்கும் இருப்பதைக் காண்கிறோம். இந்த நல்ல மனம் கடைசி மனிதன் உள்ளவரை இருக்கும். அந்த ஈர நெஞ்சம் வாழும் வரை மனிதக் குலம் தழைத்து நிற்கும்; உலகம் வாழ்ந்து வரும்.

அறிவு, அணு, நீர்க்குண்டுகளை ஆக்கித் தந்தாலும், அவற்றின் அழிவாற்றலைத் தடுத்து நிறுத்த மனதிற்கு வலிமையுண்டு. அம் மனத்தால் சிறந்தவன் மனிதன். எனவே அவனால் உலகுக்கு அழிவில்லை

ஆகலின் 'உண்டு இவ் உலகம்' என்று இளம் பெருவழுதியார் துணிந்துரைப்பது கண்டு ஐயந் தெளியலாம்; அமைதி பெறலாம்.

# உண்டு இவ்வுலகம்

(மா. கோவிந்தராசன்.)

மாடென உழைக்கும் மனிதனின் உழைப்பைக் குறைக்கவும், குறைந்த உழைப்பில் நிறைந்த பயனை விளைவிக்கவும், இல்லந்தோறும் ஒளியேற்றவும், இன்ப வாழ்வை உலகில் நிறுவவும், உதவவேண்டிய விஞ்ஞானம், இன்று நெறிகெட்டு, எப்படியோ அணுக்குண்டு, நீர்வாயுக் குண்டு எனும் இரு நச்சுக் கனிகளை ஈன்றுள்ளது. அவற்றின் நச்சு வாடையிலே உலகமே அழிந்துவிடுமோ என அச்சம் மக்களை அலைக்கழிக்கின்றது.

இன்று உலக நாடுகள் பலவும் பொருளியல் துறையால் பிளவுபட்டு, இருபெரும் பிரிவாக, எதிரெதிராக அணிவகுத்து நிற்கின்றன. ஒரு சில நாடுகள் எப்பக்கமும் சேராமல் இருபக்கமும் சூட்டைத் தணிவிக்கும் வகையில் பணி புரிந்து வருகின்றன. ஆயினும், இதையும் மீறி என்று வெடித்திடுமோ உலகப் போர் என அரசியல் அறிஞர் அஞ்சுகின்றனர். போர் மூண்டு, அணு, நீர்வாயுக் குண்டுகள் ஏவப்பட்டால் உலகமே அழிந்துவிடும் என்று, அவற்றின் ஆற்றலைக் கணக்கிட்டு எச்சரிக்கின்றனர் விஞ்ஞானிகள். பசிபிக் கடலில் அமெரிக்கா வெடித்துப் பார்த்த நீர்வாயுக் குண்டின் அழிவாற்றல் விஞ்ஞானிகளையும் திகைக்க வைத்தது. அவர்களின் திறனும் அறிவையும் மீறிகிற்கிறது, இவ்வரக்கக் குண்டுகளின் அழிவாற்றல். எனவே, அரசியல் அறிவு வந்தவர் யாவரும் அஞ்சுகின்றனர், இத்தகு குண்டுகள் ஏவப்படும் நிலை பிறந்தால் விளைவு என்னவாகும் என்றெண்ணி.

வாழையடி வாழையாக இதுவரைத் தழைத்துவந்துள்ள மனித குலத்துக்கு இது ஒரு சோதனைக் காலந்தானா? மனித குலம் இச் சோதனையில் தப்பிப் பிழைக்குமா? அன்றி, மனிதனின் அறிவில் விளைந்த நஞ்சே, மக்களைத் தீய்த்துவிடுமா? என்பன ஆய்வுக்குரியன.

இக் கேள்விகட்கு விடை காணுமுன் இதுவரை மனித குலம் தழைத்து வந்தது எதனால்? உலக வாழ்வு உயிர்கொண்டு இதுவரை இயங்கி வந்தது எந்த ஆற்றலால்? என்பதைக் கண்டு தெளியவேண்டும். ரஷிய நாட்டு அறிஞர் டால்ஸ்டாய் "மனிதன் வாழ்வது எதனால்" (What men live by) எனும் வினா எழுப்பி, அதற்கு விடை காணும் முறையில் ஒரு கதை அமைத்துள்ளார்.

உம்பர் உலகத்து உறையும் ஒருவன் இறைவனால் சபிக்கப்பட்டு, தன் தெய்வத் தன்மையிழந்து உலகுக்கு வருகிறான். உடலை மறைத்துக்கொள்ள ஆடையின்றி, பனி வாடை தாளாது, சுருண்டு, மடங்கி, முகத்தை முழங்கால்களுக்கிடையே புதைத்துக்கொண்டு கிடந்தான். அப்பொழுது, அவ்வழி ஒரு சக்கிலியத் தொழிலாளி, தனக்குக் குளிர்காலத்துக்கு வேண்டிய ஆடைகள் வாங்க எண்ணி வந்தது, இயலாதுபோயிற்றே என்று, கவலையே உருவாய்ச் சென்றுகொண்டிருந்தான். சென்றவன், அவ்விடத்தில் குளிர்தாங்காது சுருண்டு கிடக்கும் ஆடையற்ற அவ்வுருவத்தைக் கண்டு, எழுப்பி, "நீர், யார்?" என வினவினான்.

நிமிர்ந்து பார்த்த அத்தேவன் "நான், இப் பக்கத்துக்குப் புதிது" என்றான். தொழிலாளிக்கு, ஆடையற்ற அம் மனிதனிடம் இரக்கம் பிறந்தது. ஆயினும், மறுகணமே, தனக்கே குளிருக்கு வேண்டிய போதிய ஆடையில்லையே என்ற நினைவு எழுந்தது. அந்நினைவிற்கும், இரக்கத்திற்கும் ஒரு கணம் போராட்டம். முடிவில் அவனது நல்ல மனம் வென்றது. தன் மேல் உடலை மூடியிருந்த ஒரே சொக்காயைக் கழற்றி அப் புதியவனுக்குப் போட்டு, தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அப்பொழுது அத்தேவனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

வீட்டிலே தொழிலாளியின் மனைவி, இருக்கும் கோதுமை மாவை அளந்து பார்த்துக்கொண்டும், இன்னும் இரண்டு நாட்களுக்காவது இது போதாதா என்று கணக்கிட்டுக் கொண்டும், இந்நேரம் குளிருக்கு வேண்டிய புதிய ஆடையுடன் தன் கணவர் வந்துகொண்டிருப்பார் என்று எண்ணமிட்டுக் கொண்டும் இருக்கிறாள். ஆனால், புதிய ஆடையும் வாங்காமல், இருந்த ஆடையையும் இன்னொருவனுக்கு ஈந்துவிட்டு, அவனையும் உடன் அழைத்து வரும் தன் கணவனைக் கண்டதும் முதலில் ஆத்திரங் கொள்கிறாள். அவனது செயலுக்காக அவனைக் கடிந்துகொள்கிறாள். ஆனால், அவன் நிலைமையை விளக்கி, புதியவனின் இரங்கத்தக்க நிலைக்குப் பரிந்து பேசியதும், அவளும் அவன்பால் இரக்கங் கொள்கிறாள். உணவு படைத்து ஒப்புரவு

காட்டுகிறாள். அத்தேவனின் முகத்தில் மீண்டும் புன்னகை ஒளிவிட்டு மறைகிறது.

அவ்வானவன் தொழிலாளியுடனேயே தங்கி, அவனது தொழிலைக் கற்றுத் தேர்ந்து அவனுக்கு உதவியாய் இருக்கிறான். ஒரு நாள் ஒரு வயது முதிர்ந்த அம்மாள் இரு பெண் மக்களுடன் வந்து, அவ்விருவர்க்கும் கால் அணி செய்து தரச் சொல்கிறாள்; இருவர்க்கும் அளவெடுக்கையில் ஒரு பெண்ணின் ஒரு கால் சிறிதே ஊனமாயிருப்பதைக் கண்டு தொழிலாளி காரணம் வினவினான். அவ்விருவரும் தன் மக்கள் அல்ல வென்றும், அவர்கள் இரட்டைப் பிறவியினராய்ப் பிறந்த உடனேயே, தாய் இறந்துவிட்டதாயும், அவள் இறக்குந் தறுவாயில் புரண்டதால், ஒரு குழந்தையின் கால் நசுங்கி ஊனப்பட்டுவிட்டதென்றும், அதுமுதல் அவர்களைத் தானே வளர்ப்பதாயும், தனக்கு இப்பொழுது அவர்கள் மீதுதான் பற்று, பாசம் எல்லாம் என்றும் விளக்கினாள்.

இது கேட்டு நின்ற தேவனின் முகத்தில் மீண்டும் புன்னகை மலர்ந்தது. அவனுடல் புது ஒளி பெற்றுத் திகழ்ந்தது. இது கண்ட தொழிலாளி மிக வியப்புற்று, அத் தேவனைப் பார்த்து, "உன்னைக் கண்டது முதல் உன்னிடம் அபூர்வசக்தி ஒன்று புதைந்திருப்பதை அறிந்து கொண்டேன்; அன்று என்னை முதன் முதலில் சந்தித்த பொழுதும், என் மனைவி முதல் நாள் உனக்கு உணவு படைத்தபோதும் சிரித்தாய். இப்பொழுதும் மீண்டும் சிரித்தாய். காரணமென்ன?" என்று வினவினான்.

அத்தேவன், "நான் கடவுளால் சபிக்கப்பட்டு இவ்வுலகுக்கு வந்தேன். இங்கு ஒரு உண்மையைக் கண்டறிந்து செல்ல இருந்தேன். எனவே, அவ்வுண்மை விளக்கம் தெரிந்த பொழுதெல்லாம் சிரித்தேன். முதலில், உன்னைக் கண்ட பொழுது, உனக்கும் உன் மனைவிக்கும் வேண்டியது பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தாய். அப்பொழுது உன் முகத்தில் சாவின் சாயை படர்ந்திருக்கக் கண்டேன். பின்னர், நீ என்னிடம் வந்து, உன் ஆடையை எனக்குப் போர்த்தி, என்னை உன் வீட்டிற்கு அழைத்தபோது, சாவையறியா அமுதம் உன் முகத்தில் பொங்கக் கண்டேன். ஆகவே சிரித்தேன்.

"உன் மனைவியைப் பார்த்த பொழுது முதலில் அவள் முகத்தில் சாவின் சாயையும், பின்னர் எனக்கு உணவு படைத்த பொழுது தெய்வக் களையும் கண்டேன். ஆகவே சிரித்தேன்.

"இதோ நிற்கும் இவ்விரு குழந்தைகளின் தாயின் உயிரைக் கவர நான் சென்ற பொழுது, இனி இக் குழந்தைகளின் நிலை என்னவாகும் என வருந்தினேன் ஆனால், பெற்ற தாய் போன பிறகும் பிழைக்க முடியும் அவர்களால் என்பதை இந்தத் தாய் கூறியதிலிருந்து அறிந்தேன். எனவே, சிரித்தேன். இப்பொழுது எனக்கு உண்மை விளக்கம் உண்டாகிவிட்டது. மனிதன் எதனால் வாழ்கிறான் என்பதை அறிந்து செல்லவந்தேன். பிறர் துயர் கண்டு இரங்கும் ஈரநெஞ்சத்தால், அவ்வொப்புரவால், சான்றாண்மையால் மனிதன் வாழ்கிறான் என்பதை அறிந்துகொண்டேன். நான் செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. வருகிறேன்" என்று சொல்லி ஒளிப்பிழம்பாகி, வானோக்கிச் சென்று மறைந்து விடுகிறான்.

டால்ஸ்டாயின் இவ்வரிய கதை, சான்றாண்மைதான் இவ்வுலகை நடத்திச் செல்கிறது என்ற உண்மையை விளக்குகிறது.

உலக வாழ்வு எதனால் இயங்கி வருகிறது என ஆராய்ந்து, இதே கருத்தை இன்னும் விளக்கமாகச் சொல்லும் புறநானூற்றுப்பாடல் ஒன்று உண்டு. 'இளம் பெருவழுதியார்' எனும் புலவர் பாடிய அப் பாடலைக் காண்போம்.

"உண்டால் அம்மஇவ்
உலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ
தாயினும், இனிதெனத்
தமியர் உண்டலும்
இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்,
பிறர் அஞ்சுவது அஞ்சி;
புகழெனின் உயிரும்
கொடுக்குவர்; பழியெனின்,
உலகு உடன் பெறினும்
கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர்
உண்மை யானே."

உண்டு இந்த உலகம்; ஏனெனில், வானமிழ்தமே இயைவதாயினும், அதன் இனிமை கருதி, அதனைத் தனியே உண்பவர் எவரும் இலர். பிறர் மீது வெறுப்புக் கொள்கின்றவரும் இங்கு இல்லை. பிறர் அஞ்சும் இடர்களுக்குத் தாமும் அஞ்சி, நல்லன செய்யாது மனம் துஞ்சிபவரும் யாரும் இல்லை.

புகழ் தரும் செயல் எனின் உயிர் கொடுத்தும் செய்து முடிப்பர். பழி தரும் செயல் எனின், அதனல் உலகம் முழுதும் பெறுவதே ஆயினும், அச் செயல் நாணுவர். செயல் திறனில் அயர்விலாதவர். இத்தகு மாட்சிமையே உருவாகித் தமக்கென்றில்லாது பிறர்க்கென பெரு முயற்சிகளில் ஈடுபடும் சான்றோர் பலர் இருத்தலால் இவ்வுலகம் உண்டு என்று துணிகிறது இப் பாடல்.

தமக்கென இன்றிப் பிறர்க்கெனப் பெரு முயற்சிகளில் ஈடுபடும் சான்றோர் பலர் வாழ்ந்தனர்; இன்றும் வாழ்கின்றனர் என்பதை நாம் அறிவோம்.

தமிழ் பாடி, தன்னிடம் வந்தோர்க்கெல்லாம் வாரி வழங்கி விட்டு, நாடு நலம் இழந்து, தனியனாய்க் கானில் வதிந்த பொழுதும், "குழவி பாலுக்கழுது தாயின் முகம் நோக்க, தாய் என் முகம் நோக்க, நான் உன் முகம் நோக்கி வந்தேன் குமண!" எனப்பாடிய புலவனின் வறுமையைத் தன் தலைகொடுத்துப் போக்க முனைந்த அந்தக் கொடை நெஞ்சமும், ஓரளவு உயிரின் வாடுதலையும் காணச் சகியாது முல்லைக்கொடிக்குத் தன் தேர் தந்த பாரியின் ஈர நெஞ்சமும் நம் வரலாறு கண்டவை.

தன்னைச் சிலுவையில் அறைந்த போழ்தும் "அறியாது செய்பவர் இவர், இவர்தம் பிழை பொறுப்பாய் இறைவா" என இறைஞ்சிய முனிவிலா நெஞ்சமும் நாம் அறிந்ததே.

இடர்கள் நேர்கின்ற தெனினும், நஞ்சு நிறைந்த கிண்ணமே கையிலே தரப்பட்ட தெனினும், அஞ்சாது, அறிவொளி பரப்பிய துஞ்சாத மனத்தையும் கிரேக்க நாடு கண்டுள்ளது.

தாய் நாட்டிலே பகைவர் புகுந்து வெற்றிக் கொடி நாட்டுவது கண்டும், அதனைத் தடுப்பார் யாருமின்றித் தாயகம் தவித்த போது, ஒரு பெண்ணுள்ளம் வீறு கொண்டெழுந்து, படை திரட்டி, முரசு கொட்டி, பகைவரைப் புறங்கண்டு, முடிவில் பகைவர் வயப்பட்டு, வானோக்கி வளரும் தணல் தன் தளிருடல் தழுவிய போழ்தும், வான் புகழே தன்னைத் தழுவுவதாக எண்ணி, உவந்து உயிர் ஈந்த வீர உள்ளத்தையும் பிரஞ்சு நாடு கண்டது.

இளையவன் உலகாள்வான் எனக் கோள் நூல் வல்லுநர் கூறியது கேட்டு, மூத்தோன் இருக்க இளையவன் நாடாளும் பழி நான் கொள்ளேன் என அரசவாழ்வையே உதறித் தள்ளிய, பழி அஞ்சிய தூய உள்ளத்தையும் நம் நாடு கண்டுள்ளது.

குருதியைக் கொட்டி வியர்வையாக்கி, உடல் துவள உழைக்கும் ஏழையின் உழைப்பைக் குறைக்க, பெருகி வரும் மக்கள் தேவையை ஈடுசெய்ய, விஞ்ஞான அறிவை வளர்ப்பேன் எனக் கடமை மேற்கொண்டு, கண் துஞ்சாது, பசி நோக்காது, உடலை மறந்து, உலகை மறந்து உழைத்த உத்தமர்கள் பலரைக் கண்டோம்; அயர்விலா அவர்தம் பணியின் பயனையும் இன்று அனுபவிக்கிறோம்.

தமக்கென இன்றி, பிறர்க்கெனப் பெரு முயற்சி மேற்கொள்ளும் மாட்சிமை மிக்க மனத்தினை வரலாறு கண்டு வந்தது; இன்றும் நாம் காண்கிறோம். இந்த நல்ல மனம் ஏற்புடைய இடத்திலே அங்கங்கு இன்னும் வாழ்ந்து வருகிறது. ஓரிரு இடங்களில் அம் மனம் குன்றின் மீதிட்ட விளக்கினைப் போல் பலர் அறிய ஒளிர்ந்தாலும், பொதுவாக, பரவலாக, ஏற்ற

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி;

விருப்பு வெறுப்பு ஏது? அங்கே அறமே வாழும். அத்தகைய அறவடிவான ஓவியத்தை உலகம் பார்த்திருக்கின்றதா? எனின், ஆம்! பார்த்ததுண்டு என அஞ்சாது பதிலிறுக்கும் 'தமிழிலக்கிய' உலகம்.

செம்மையும் வளமையும் கவினுறக் கலந்து கவிதையில் நிலைநாட்டியுள்ள திருவள்ளுவரை நினைவில் இருத்தும் வரையில் தமிழகம் 'மனித வாழ்க்கையின் இலட்சியம் முடிவடைந்தமையைக் காட்டும் எல்லைக் கல் நம் நாட்டில் உண்டு' என்னும் பெருமையினை இழக்கவே நேரிடாது; திருக்குறளை ஊன்றிப் படிக்குங்கால் அது முழக்க முழக்க அது வாழ்க்கை நடத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு கை விளக்காக விளங்கும் என்பது தெளிவு.

அறிவும், உணர்வும் தகுந்த முறையில் கலக்கப்பட்டு, தமிழிலக்கிய வளமையின் உச்சநிலைக்குக் கலங்கரை விளக்காக இருப்பதும் அதுவே. அதுமட்டுமல்லாமல் உலகம் முழுவதும் உய்வதற்கு வேண்டிய தக்க அறநெறியினை நாட்டியுள்ளதும் அதுவே. அவ் வறநெறி எவ்வாறு எனக் காண்பது மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)